DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | விநாயகா |
| Father's Name | : | ரமேஷ் |
| Village | : | கர்நாடகா (பெங்களூரு) |
| Taluk | : | பெங்களூரு |
| District | : | கர்நாடகா |
| Profession | : | பெட்டிக்கடை வியாபாரம் |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 27th day of February 2025.

1,2 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி தனக்கு தாய்மொழி கன்னடம் என்றும், தமிழ் சுமாராக தான் தெரியும் என்றும் கூறியதால் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த S.காயத்ரி, தலைமைக் காவலர் எண்.1344, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு என்பவர் தனக்கு கன்னடம் தெரியும் என்று கூறியதால் அவர் உதவியுடன் சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது கர்நாடகா மாநிலம், பெங்களூருவில் எலக்ட்ரானிக் சிட்டியில் குடியிருந்து வருகிறேன். பெட்டிக்கடை நடத்தி வருகிறேன். அ.சா.1, சாட்சி வேணுகோபால் எனது நண்பர்கள் ஆவர். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை, காலை 10.00 மணியளவில் நான் அ.சா.1, ஜெகதீசன், வேணுகோபால் ஆகியோர் எலக்ட்ரானிக் சிட்டியில் இருந்து கிளம்பி காரில் வந்த போது நான் பின்சீட்டில் தூங்கிக் கொண்டிருந்தேன். இவ்வழக்கு விவரங்கள் அ.சா.1 க்கு தான் தெரியும். எனக்கு அது பற்றி தெரியாது. அவர் எனக்கு அதிகம் பரிட்சயமான நண்பர் இல்லை. நான் அவரிடம் எதுவும் கேட்டு தெரிந்து கொள்ளவும் இல்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 யைத்தான் விசாரித்தார்கள்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.</u>

நீங்கள் பயணம் செய்த Hundai கார் சாட்சி வேணுகோபாலுடையது என்றால் சரிதான். எலக்ட்ரானிக் சிட்டியில் இருந்து தேன்கனிக்கோட்டை வழியாக ஒகேனக்கல்லுக்கு சென்றீர்களா என்றால் ஆமாம். நீங்கள் பயணம் செய்த தேன்கனிக்கோட்டை – ஒகேனக்கல் சாலை அடர்ந்த வனப்பகுதியை உடையது என்றால் நான் தூங்கி விட்டேன், எனக்கு தெரியவில்லை. கார் எத்தனை இடத்தில் நிறுத்தப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மதுராஜரெட்டியை போலீசார் விசாரித்த போது நீங்கள் உடன் இருந்தீர்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகளை உங்களுக்கு நன்கு தெரியும் என்றும், சம்பவ தினத்தன்று ஆஜர் 1, 2 எதிரிகளை நீங்களும் அ.சா.1 வும் தான் போலீசிடம் அடையாளம் காட்டி காவல் நிலையத்தில் அ.சா.1 வுடன் சேர்ந்து புகார் அளித்து விட்டு எதிரிகளை பற்றி இதர தகவல்களை போலீஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு தமிழ் நன்றாக தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

இல்லை.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

S.காயத்ரி,
தலைமைக் காவலர் எண்.1344,
குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW4 |
| Name | : | ஜெகதீஷ் |
| Father's Name | : | லேக்கேஷ் வர்மா |
| Village | : | பெங்களூர் |
| Taluk | : | பெங்களூர் |
| District | : | கர்நாடகா |
| Profession | : | கூலி |
| Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 27th day of February 2025.

1,2 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி தனக்கு தாய்மொழி கன்னடம் என்றும், தமிழ் சுமாராக தான் தெரியும் என்றும் கூறியதால் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த S.காயத்ரி, தலைமைக் காவலர் எண்.1344, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு என்பவர் தனக்கு கன்னடம் தெரியும் என்று கூறியதால் அவர் உதவியுடன் சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது பெங்களூரில் உள்ள எலக்ட்ரானிக் சிட்டியில் குடியிருந்து வருகிறேன். கார்மெண்ட்ஸ் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 மதுராஜரெட்டியின் வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை, பகல் 12.00 மணியளவில் ஒகேனக்கல்லுக்கு அ.சா.1, அ.சா.3, நான் மற்றும் வேணுகோபால் ஆகியோர் வேணுகோபாலின் காரில் சென்றோம். நான் காரில் தூங்கிக் கொண்டிருந்ததால் என்ன நடந்தது என்று தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக நானும், அ.சா.1வும் தேன்கனிக்கோட்டை காவல் நிலையம் சென்றிருந்தோம். அ.சா.1 மட்டும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். நாங்கள் காரிலேயே இருந்தோம். வழக்கின் விவரங்கள் எதுவும் அ.சா.1 என்னிடம் தெரிவிக்கவில்லை. அவர் கையெழுத்து போடச்

சொன்னார், நான் போட்டேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் ஒசூர் கோர்ட் வாசலில் வைத்து விசாரணை செய்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.</u>

ஒசூர் கோர்ட் அருகே வைத்து போலீசார் உங்களை விசாரித்த போது அ.சா.1 எதிரிகள் சம்பவ தினத்தன்று நீங்கள் சென்ற காரை வழிமறித்து பணம் கேட்டார்களா என்ற விவரத்தை உங்களிடம் சொன்னாரா என்றால் அவர் போலீசாரிடம் தமிழில் சொன்னார் எனக்கு தமிழ் தெரியாது. புகார் அளித்து விட்டு பெங்களூரு செல்லும் போது அ.சா.1 உங்களிடம் தெரிவித்தாரா என்றால் நான் அவர் வீட்டில் வாடகைக்கு இருக்கிறேன், அதனால் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. போலீசாரிடம் நீங்கள் கையெழுத்து போட்ட விவரத்தை அ.சா.1 உங்களிடம் தெரிவித்தாரா என்றால் தெரிவிக்கவில்லை. ஆஜர் எதிரிகள் ஒசூர் நீதிமன்றம் அருகே உங்களை விசாரித்த போது அங்கு இருந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. தற்போது நீங்கள் அ.சா.1 இன் வாடகை வீட்டில் குடியிருக்கிறீர்களா என்றால் இல்லை, எனது ஊரில் குடியிருக்கிறேன். அ.சா.1 ற்கும் உங்களுக்கும் தற்போது பேச்சு வார்த்தை இல்லை என்பதால் வழக்கின் விவரங்களை நன்கு தெரிந்து கொண்டு போலீஸ் வாக்குமூலத்தில் எதிரிகளை ஒசூரில் வைத்து அடையாளம் காட்டிவிட்டு தற்போது எதிரிகளை நீங்கள் பார்க்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

இல்லை.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

S.காயத்ரி,
தலைமைக் காவலர் எண்.1344,
குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 118 of 2021 |
| Deposition of witness for | : | PW5 |
| Name | : | வேணுகோபால் |
| Father's Name | : | ஆனந்துகரட்டி |
| Village | : | இன்னாக்கி |
| Taluk | : | ஆனேக்கல் |
| District | : | பெங்களூர் |
| Profession | : | டிரான்ஸ் போர்ட் |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 27th day of February 2025.
1,2 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது ஆனேக்கல் தாலுகா, இன்னாக்கி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். டிரான்ஸ் போர்ட் பிசினஸ் செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள ஆங்கிலத்தில் இருக்கும் இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது. மேற்படி கையெழுத்தை நான் 2020 ஆம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை, மதியம் 12.00 மணியளவில் அஞ்செட்டி பாரஸ்ட் போகும் வழியில் காட்டுப்பகுதியில் வைத்து போலீசிடம் கையெழுத்து செய்து கொடுத்தேன். நான் காரை ஓட்டிக் கொண்டு வந்தேன், போலீசார் காரை நிறுத்தினார்கள். நான் ஓட்டி வந்த கார் மதுராஜரெட்டியின் சிகப்பு கலர் Hundai கார் ஆகும். அப்போது இரண்டு பேர் காரை கை காட்டி நிறுத்தினார்கள். அ.சா.1 அவரிடம் பேசினார். நான் காருக்குள்ளேயே இருந்தேன். அதன் பிறகு அவர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். அதன் பிறகு காவல் நிலையத்தில் அவரை விசாரித்தார்கள். கையெழுத்து போடச் சொன்னார்கள். நான் போட்டேன். பார்வை மகசரில் உள்ள என்னுடைய கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டுக் கொடுத்தேன். என்னுடைய கையெழுத்து

**அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.1 யை விசாரிக்கும் போது நான் காரில் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து வெள்ளைத்தாளில் தான் கையெழுத்து செய்து கொடுத்தீர்கள் என்றால் ஆமாம். அ.சா.1 மதுராஜரெட்டி காவல் நிலையத்திற்கு சென்று பேசி விட்டு வந்த பிறகு உங்களை கையெழுத்து போட சொன்னார், அதனால் நீங்கள் கையெழுத்து போட்டீர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கை குறித்து உங்களுக்கு எதுவும் தெரியாது, போலீசார் அழைத்ததன் பெயரில் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.